whom the hon. Member has referred to. They are representing different institutions in the City. Because the Committee may have to meet very often, persons from outside Madras City are not included in the Committee for the convenient functioning of the Committee.

Distribution of Baby Food

* 28 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(*a*) whether it is a fact that the State Government have sought the permission of the Central Government for taking over the distribution of baby food;

(*b*) if so, the reason therefor; and

(*c*) the stage at which the matter now stands?

குழந்தைகள் உணவுப்பொருள் விநியோகம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குழந்தைகள் உணவுப்பொருள் விநியோகத்தை மேற்கொள்ள மாநில அரசு மத்திய அரசின் அனுமதியைக் கோரியுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது ?

(உ) தற்போது இந்த விஷயம் எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) & (இ) இம்மாநிலத்திலுள்ள நியாய விலைக்கடைகள் மூலம் குழந்தைகள் உணவைப் பங்கிட்டளிக்கும் பொருட்டு, தயாரிப்பாளர்களிடமிருந்து குழந்தைகள் உணவைத் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகத்திற்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு இந்த அரசு, இந்திய அரசிடம் கேட்டுள்ளது.

(உ) இந்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, என்ன காரணத்திற்காக இந்த மாதிரி மத்திய அரசினை நமது மாநில அரசு கேட்டிருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

1974 சனவரி 22]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இப்போது இது தனி வியாபாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் வினியோகத்தை முறைப்படுத்துவதற்காக குழந்தைகள் உணவினை வழங்கும் ஏற்பாட்டை உணவுப் பொருள் வழங்கல் கழகத்திடமே விடுவது சிறந்ததாக இருக்கும் என்றுதான் மத்திய அரசினைக் கேட்டிருக்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, தற்பொழுது குழந்தைகள் உள்ளவர்கள் பர்த் செர்ட்டிஃபிகேட்டை வாங்கிக் கொடுத்து அதன் மூலம் ரெஜிஸ்டர் செய்துகொண்டு, அவர்களுக்கு என ஒதுக்கப்படும் குழந்தை உணவினைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். இதிலும் பல சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கும். இந்த ஏற்பாடு இருந்தும்கூட பல இடங்களிலே குழந்தை உணவினை தனியார் விற்று வருகின்றார்கள். இவர்கள் விற்பதில் என்ன கெடுதல் வந்துவிட்டது, ஏன் அரசே இதை ஏற்று நடத்த வேண்டும் என்று அரசு கருதுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, தனியாரிடம் இது இருப்பதில் விநியோகம் முறைப்படி நடைபெறவில்லை என்று அறிந்து அதற்குப் பிறகு இப்போதுள்ள முறையில் ஒரு வயதுக்குக் கீழுள்ள குழந்தைக்கு மூன்று கிலோ என்றும், 1 வயது முதல் 2 வயது உள்ள குழந்தைகளுக்கு 2 கிலோ என்றும் வைத்து இதை முறைப்படுத்துவதற்காக இந்த ஏற்பாட்டைச் செய்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல, அதுவும் சரியான முறையில் செயல்படவில்லை என்றுதான் இது பூராவையும் மாநில அரசின் பொறுப்பில் ஏற்று நடத்த வேண்டும் என்று இதைக் கேட்டிருக்கிறோம்.

THIRU A. R. DAMODARAN: If the Government are so anxious that baby food which is certainly scarce should be equitably distributed, may I know, Sir, whether this Government have approached the Central Government for a licence to manufacture baby food in this State itself?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இப்போது பால் உற்பத்தி அதிகமாக உள்ள இடங்களிலே தேவை போக மிச்சமிருப்பதை இப்படிக் குழந்தைகள் உணவாகத் தயார் செய்து வருகின்றார்கள். நமது மாநிலத்தில் இப்போதுதான் இதில் நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்கின்றது. எனவே நமது மாநிலத்திலும் இதைத் தனியாகச் செய்வதற்கான முயற்சியை இனித்தான் மேற்கொள்ள வேண்டும்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்தப் பாலுணவைப் பொறுத்த வரையில், தமிழகத்தின் ஆண்டுத் தேவை எவ்வளவு என்று அரசு கணக்கிட்டிருக்கின்றதா? அதில் எவ்வளவு தனியார் உற்பத்தி செய்கின்றார்கள் என்று கணக்கிட்டு அவர்களிடமிருந்து நேரடியாகப் பெறுவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, பற்றாக்குறையைக் கணக்கிட்டுத்தான் இப்போது தனியாரிடமுள்ள உற்பத்தியைப் பொதுத் துறைக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகளைச் செய்து வருகிறோம்.

THIRU A. R. DAMODARAN : We have shortages in various other products like Vanaspathi. May I know whether it is the policy of the Government to take over the distribution of all commodities that are in short supply?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அப்படி ஒரு கொள்கை இருக்கிறது.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, இப்போது குழந்தை பெற்றிருப்பவர்கள் குழந்தை உணவு வேண்டும் என்று பர்த் செர்ட்டிஃபிகேட்டைக் கொண்டு போய்க் கடையில் கொடுத்தாலும்கூட, 'என்னிடம் அடியோடு சரக்கே இல்லை, உற்பத்தி செய்கின்றவர்கள் எங்களுக்கு சரக்கே தருவது இல்லை' என்று கூக்குரல் இடுகின்றார்களே, இது நமது சர்க்காருக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இதை முறைப்படுத்த வேண்டும் என்று இதற்காக அரசு ஒரு உத்தரவிட்டு, ஒவ்வொரு வியாபாரியும் தங்கள் கையில் எவ்வளவு இருக்கின்றது, எவ்வளவு விற்றிருக்கின்றார்கள், கையிருப்பு எவ்வளவு இருக்கின்றது, என்னென்ன விலைக்கு அவற்றை விற்கின்றார்கள் என்பதையெல்லாம் விளம்பரப் பலகையில் போட வேண்டும். அதை உணவுப் பங்கீட்டு இலாகா அதிகாரிகள் அடிக்கடி கண்காணிக்க வேண்டும் என்ற ஏற்பாடுகளைச் செய்தும் கூட பல சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக பல இடங்களிலே வழக்குகளும் போட்டிருக்கிறோம்.

THIRU A. R. DAMODARAN : May I know whether it will be the policy of the Government to distribute these essential commodities through co-operatives or through other agencies?

1974 சனவரி 22]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, கூடிய வரையில் கூட்டுறவுத் துறை மூலம் செய்ய முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறோம்.

THIRU A. R. DAMODARAN : May I invite the attention of the Hon. Minister to the recent complaint made by the Consumers' Council of India about the under-weighment done in certain fair-price shops in Madras City controlled by the Civil Supplies Department?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அவ்வாறு அரசின் கவனத்திற்கு வந்து, எல்லா நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறோம்.

திரு. எல். பலராமன்: குழந்தைகள் பால் உணவு தமிழ் நாட்டுக்குத் தேவையானது எவ்வளவு டன் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, புள்ளி விவரம் இப்போது என்னிடம் இங்கு இல்லை.

THIRU G. VASANTHA PAI: Sir, are the Government aware that in the shops of the Civil Supplies Department and Co-operatives where sugar is being distributed, long queues of people are waiting for long number of hours for receiving sugar? Will the Government consider the issue of licences to the old retailers provided they are keeping up to the standards and requirements of the Government for a further period of time to enable the public to get sugar without much difficulty?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அப்படியிருந்த குறையை நிவர்த்திக்க, அதிகமான குடும்ப கார்டுகள் கொடுக்கப்பட்டிருந்த இடங்களிலே, அதைக் குறைத்து சரி செய்து, க்யூ நீளமாக இருக்க வேண்டிய நிலைமையில்லாமல் எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ, அந்த அளவுக்குச் செய்துகொண்டு வருகிறோம். க்யூ வரிசை அதிகமாக இருக்கக் காரணம், தனியாரிடத்திலிருந்து எடுத்து கூட்டுறவுத் துறையிடமும், அரசாங்கக் கடைகளிடமும் கொடுக்கப்பட்டதுதான். நாளடைவில், இந்தக் க்யூ வரிசை குறைய வகை செய்யப்பட்டு வருகிறது.

திரு.. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, குழந்தைகள் உணவுப் பொருட்களுக்கு முன்பு எல்லாம் தாலுக்கா அலுவலகத்தில் பெர்மிட் கொடுத்தார்கள். யார் குழந்தைகள் உணவு வேண்டும் என்று நினைத்தார்களோ, அவர்கள்

பெர்மிட் வாங்கி, அந்த உணவுப் பொருளைப் பெற்றுக்கொண்டார்கள். பல ஆண்டுகளாக இந்த முறைதான் இருந்தது. இப்போது ரிஜிஸ்தர் செய்ய வேண்டும் என்று வைத்திருப்பதால், பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டு, சர்டிபிகேட் வாங்க லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆகவே முன்பிருந்ததுபோல பெர்மிட் முறையைக் கொண்டு வர அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அவசரமாகவும், திடீரென்றும் நாங்கள் பங்கீட்டைச் சரிப்படுத்த இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறோம். மேலும் முறைப்படுத்த உறுப்பினர்கள் எல்லாம் சொல்லுகிற யோசனைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்கிறோம்.

THIRU A. R. DAMODARAN: Sir, may I know, in the distribution of baby food, whether the weight of the babies will also be taken into consideration while distributing baby food through shops in accordance with the scheme of the Civil Supplies Department?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இன்னும் நாம் குழந்தைகளை எடை போடுகின்ற முறையை வைக்கவில்லை. வயதைத் தான் நிர்ணயித்திருக்கிறோம். குழந்தைகளை எடைபோடுவது என்றால், நம் நாட்டுக் குழந்தைகளுக்கும், மேலை நாட்டுக் குழந்தைகளுக்கும் இடையே எடையில் மிக வித்தியாசம் வருகிறது. அந்த முறையை நாம் கையாளவில்லை. இப்போது வயதைத்தான் நிர்ணயித்து பங்கிடு செய்து வருகிறோம்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, எடை போடுவதற்கு எடை மெஷின் வைத்து ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, எடை போடுவது என்று வந்தால், அதற்கு மெஷின் வாங்குவதா, எப்படி எடை போடுவது என்று யோசித்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் மெஷின் வாங்கி வைத்துக் கொள்ள யாரும் குறுக்கே நிற்கமாட்டார்கள். திரு. முத்துசாமி வாங்கி வைத்துக்கொள்ளலாம்.

திரு. அ. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே இங்கே நடக்கிற விவாதத்தை பார்த்தால், குழந்தைகள் உணவு நகரப் பகுதியில் தவிர கிராமப் பகுதியில் விநியோகம் செய்யப்படுகிறதா என்று சந்தேகமாக இருக்கிறது.

1974 சனவரி 22]

அரசாங்கம கிராமப் பகுதிகளில் உள்ள குழந்தைகளுக்கும் இந்த உணவைச் சாப்பிட விளம்பரம் செய்து கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, உறுப்பினர் சொன்னது போல், நகரப்புறத்தில்தான் குழந்தைகள் உணவுக்காக இந்த முறையை வைத்திருக்கிறார்கள். காரணம், நகரத்தில் உள்ள தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்கக்கூடிய நிலைமை இல்லை. கிராமத்தில் உள்ள தாய்மார்கள் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்கின்ற நிலைமையிருப்பதால், கிராமத்தில் இதுவரையில் இந்த உணவை விரும்பாமல் இருக்கிறார்கள். பற்றாக்குறை இருக்கிற நேரத்தில், அவர்களுக்கும் இந்த உணவை விளம்பரம் செய்வது ஆபத்து என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் குழந்தைகளாக ஆகிறார்கள். அவர்களுக்கும் 'பேபி' உணவு தேவைப்படுகிறது. ஆகவே வயதை நிர்ணயித்து, 60 வயதுக்கு மேற்பட்டவர்களை குழந்தைகளாகப் பாவித்து இந்த உணவு தருவார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, 60 வயதுக்கு மேற்பட்டு குழந்தைப் பருவம் வருகிறவர்களுக்கு, இந்த உணவு தான் சாப்பிட வேண்டும் என்ற நிலை இல்லை. சாதாரண உணவை, குழந்தைகளுக்குக் கரைத்துக் கொடுப்பது போல், இவர்களுக்கும் கரைத்துக் கொடுத்து விடலாம். மென்று சாப்பிட பல் இல்லை என்று யோசிக்கிறார் போலிருக்கிறது. அதற்கு நமது பரம்பரை முறை இருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, கிராமங்களில் பால்வாடி என்ற அமைப்பு வைத்துக்கொண்டு குழந்தைகளுக்கு உணவு கொடுத்து வருகிறார்கள். அதற்கும் இதற்கும் சம்பந்தம் உண்டா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அந்தத் திட்டம் வேறு, இது வேறு.

Collection Bonus Scheme

* 29 *Q.*—THIRU V. THANGAPANDIAN: (on behalf of THIRU R. SAMBASIVAM): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Pallavan Transport Corporation has introduced a new scheme called collection bonus scheme in some routes in Madras City; and

(*b*) if so, whether there is any proposal to introduce the scheme in all other routes in Madras?